
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1240

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

116

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# தோழர் பெ.சண்முகம் கண்களில் புதிய புரட்சித் 'தீ'!

**த.வெ.க. கூட்டணிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிலிருந்து ஆதரவு அளிக்கும் நிலையில், த.வெ.க. அரசின் கொள்கை பரப்புச் செயலாளர் போல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அடிக்கடி தி.மு.க. மீது குற்றம் சாட்டுகிறாரே?**

மேகதாது அணை விவகாரம் தொடர்பான தமிழ்நாடு அரசின் தீர்மானத்தில் தி.மு.க. கொடுத்த திருத்தத்தைக்கூட ஏற்க மனமில்லாதவராகத் திசைமாற்றப் பார்க்கிறார், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர். பொதுவாகவே, 'தி.மு.க. ஒவ்வாமை' என்பது இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் உள்ள சிலருக்கு இருக்கும். அதனால்தான், தி.மு.க.வுக்கு எதிராக எம்.ஜி.ஆர். தனிக் கட்சி ஆரம்பித்தபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கல்யாணசுந்தரம் அவருக்குப் பக்கபலமாக இருந்தார். பிறகு, 1977-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வைத் தோற்கடித்து, அ.தி.மு.க.வை வெற்றிபெறவைக்கும் முடிவுடன், திடீர் கூட்டணி மாற்ற முடிவை எடுத்தார், மார்க்சிஸ்ட் கட்சியின் பி.ராமமூர்த்தி அவர்கள். வைகோ தனிக் கட்சி ஆரம்பித்தபோது, தி.மு.க. செங்குத்தாகப் பிளந்துவிட்டது என்று சொல்லி, ம.தி.மு.க.வை ஆதரித்து தேர்தல் களம் கண்டவர்கள் மார்க்சிஸ்ட்டுகள். 2001-ஆம் ஆண்டு, 'டான்சி ஊழல்' வழக்கில் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதாவை எப்படியாவது ஜெயிக்க வைக்க வேண்டும் என்று இரண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களும் போயஸ் கார்டன் கதவு எப்போது திறக்கும் என்று கால் கடுக்க காத்து நின்ற அவலக் காட்சிகளையும் தமிழ்நாடு பார்த்தது.

விஜயகாந்த் தே.மு.தி.க.வை ஆரம்பித்தபோது, முதன்முதலாக அவருக்கு ஆதரவு நிலை எடுத்து, ராத்திரியில் அவர் வீட்டுக் கதவைத் தட்டியவர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த ஜி.ராமகிருஷ்ணன் அவர்கள். விஜயகாந்த், 'தனித்து நிற்பேன்' என்று சொல்லி, கதவை அடைத்துவிட்டார். அதன்பிறகு சில ஆண்டுகள் கழித்துத்தான், 2016-இல், 'மக்கள் நலக் கூட்டணி'யில் தே.மு.தி.க.வும் கம்யூனிஸ்ட்டுகளும் ஒன்றாக இருந்தார்கள். புரட்சியின்மூலம் சோவியத் யூனியனை உருவாக்கிய இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளுக்கு 'புரட்சி' என்றால், 'புரட்சித் தலைவர்' எம்.ஜி.ஆர்., 'புரட்சித் தலைவி' ஜெயலலிதா, 'புரட்சிப் புயல்' வைகோ, 'புரட்சிக் கலைஞர்' விஜயகாந்த் என்பதாகவே கண்ணில் தெரிந்தது. அந்த வகையில், விஜய் இப்போது அவர்களுக்குப் புதிய புரட்சியாளராகத் தெரிந்திருக்கலாம்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவிலேயே கம்யூனிஸ்ட்டுகளின் நிலை என்ன என்பது மக்கள் அறிந்ததுதான். மேற்கு வங்கம் அவர்களிடமிருந்து பறிபோய், 15 ஆண்டுகளுக்கு மேலாகிறது. கடைசியாகக் கைவசம் இருந்த கேரளாவும் போய்விட்டது. தங்கள் நிலையைப் பார்க்காமல், தி.மு.க.வை சீண்டுவதும், அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க தி.மு.க. முயற்சி செய்ததாக அவதூறு பரப்புவதுமே சண்முகம் போன்ற மார்க்சிஸ்ட்டுகளின் முழுநேர ஊழியமாக இருக்கிறது. 'கொள்கைப் புடலங்காய்' என பா.ஜ.க.வுடன் தி.மு.க.வை சித்திரித்துப் படம் போட்டுள்ளவர்கள், இப்போது சேர்ந்துள்ள இடத்தின் 'கொள்கைப் புடலங்காய்' என்ன என்பதையும் சொல்லி இருக்கலாம்.

நடக்காத ஒன்றைத் திரும்பத் திரும்பப் பேசும் மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் ஒன்றை மறந்துவிடுகிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கொள்கை மாறுபாட்டால்தானே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனியாகப் பிரிந்தது? கொள்கை எதிரிகளான நீங்கள் இருவரும் ஒரே கூட்டணியில் இருப்பது எப்படி? மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் கூட்டணி ஆட்சியில் பங்கு போட்டுக் கொண்டது எப்படி? இதற்குப் பதிலளித்துவிட்டு, அதன்பிறகு தி.மு.க.வைப் பற்றிப் பேசலாமே தோழர்!

...வினா தொடரும்.

## மக்கள் செத்து மடியும்போது எப்படிக் கொண்டாட்ட மனநிலை?

கழக மாணவர் அணித் துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் முகநூலில் எழுப்பியுள்ள கேள்வி இது.

"2023-ஆம் ஆண்டில், கொல்கத்தாவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ், பெங்களூரு-ஹவுரா அதிவிரைவு எக்ஸ்பிரஸ் மற்றும் சரக்கு ரயில் ஆகிய மூன்று ரயில்கள் ஒடிசாவில் கோர விபத்துக்குள்ளாகி நூற்றுக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட சம்பவம் நாடு முழுவதையும் உலுக்கியது.

அத்தகைய சோகமான சூழ்நிலையில், தனது வாழ்நாள் முழுவதும் ஏழை எளிய மக்களுக்காகவும், மனித உரிமைகளுக்காகவும், மனித நேயத்துக்காகவும் குரல் கொடுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவையே கொண்டாடுவது பொருத்தமல்ல என்று கருதி, அனைத்துக் கொண்டாட்டங்களையும் ரத்துசெய்து, துயரத்தில் பங்கேற்றார், தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

ஆனால், இன்று என்ன நிலை?

அமோனியா வாயுக் கசிவால் மக்கள் உயிரிழக்கிறார்கள். நீட் தேர்வின் கொடுமையால் மாணவர்கள் தற்கொலை செய்து உயிரிழக்கிறார்கள். பாலியல் வன்கொடுமைகளால் குழந்தைகளின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

மக்கள் பாதுகாப்பு, மாணவர்களின் எதிர்காலம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்ப் பாதுகாப்பு போன்ற மிக முக்கியமான பிரச்சினைகள் தமிழ்நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால், இவை குறித்து சட்டமன்றத்தில் உரிய விளக்கமோ, பொறுப்புணர்வோ, ஆறுதல் வார்த்தைகளோ வழங்காமல், பிறந்தநாள் வாழ்த்துகளை ஏற்றுக்கொண்டு, கொண்டாட்ட மனநிலையில் இருப்பதே ஒரு முதலமைச்சருக்கான பண்பா?

மக்களின் கண்ணீரை உணராத ஆட்சி, மக்களின் வேதனையை பிரதிபலிக்காத தலைமையா இது? துயரத்தில் இருக்கும் மக்களுடன் நிற்கவேண்டிய நேரத்தில், தனிப்பட்ட புகழையும் கொண்டாட்டங்களையும் முன்னிறுத்துவது, மக்களுக்கான அரசின் செயல்பாடா?

இது மக்களுக்கான அரசா அல்லது மக்களின் துயரங்களைக் கூட, அரசியல் நிகழ்ச்சிகளின் பின்னணிச் சத்தமாக மாற்றிவிடும் உணர்வற்ற ஆட்சியா? விமர்சிப்பவர்களைக் காவல் துறையை விட்டு மிரட்டுவது, கைதுசெய்வது. நடப்பது என்ன மக்களாட்சியா? காட்டுதர்பாரா?" என்று அவர் எழுப்பியுள்ள கேள்விகளைப் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்





சு.வெங்கடேசன்

### தலைவரிடம் தேர்தல் நிதி!


2016-ஆம் ஆண்டு, நம் தானைத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, காஞ்சிபுரம் நகரக் கழகத்தின் சார்பில், நகரக் கழகச் செயலாளர் 'சன் பிராண்ட்' கே.ஆறுமுகம் அவர்களும், நகரக் கழகப் பொருளாளராக இருந்த நானும் தேர்தல் நிதி அளித்தோம். தலைவர், அருகில் இருந்த அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் விவரம் தெரிவித்து, 'முரசொலி' செய்திப் பிரிவுக்கு அனுப்பச் சொன்னார்கள். தலைவரின் ஒவ்வொரு சந்திப்பும், மறக்க முடியாத நினைவுகள்.

**- சு.வெங்கடேசன்,**
**4-வது பகுதிச் செயலாளர், காஞ்சிபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## ZOHO நிறுவனத்தின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு, தமிழ்நாட்டில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், தனது பள்ளிக்கு அனுமதி கிடைத்ததாகத் தெரிவித்துள்ள கருத்து, ஆர்.எஸ்.எஸ். கல்விக்குக் கதவு திறக்கப்பட்டுள்ளதாகப் பார்க்கப்படுகிறது.

## வலை யோசை



Yousuf Riaz

Zoho நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு, ஆர்.எஸ்.எஸ். சித்தாந்த அரசியலுக்கு வெளிப்படையான ஆதரவு கொண்டவர் என்பது புதிதல்ல. அவரது கல்வி முயற்சிக்கு விஜய் அரசு, வேகமாக அனுமதி கொடுப்பது சாதாரண நிர்வாக முடிவு அல்ல; அது கவனிக்கப்படவேண்டிய அரசியல்.

வடஇந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். பல ஆண்டுகளாகக் கல்வியை ஒரு சித்தாந்த ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. 1978-ஆம் ஆண்டு, ஜனதா கட்சியின் ஆட்சிக் காலத்தில், 'வித்யா பாரதி சிக்ஷா சன்ஸ்தான்' என்ற பெயரில், கல்வி முயற்சிகளை விரிவுபடுத்தினார்கள்.

'பண்பாடு கற்றுக்கொடுக்கிறோம்' என்ற பெயரில் மாணவர்களுக்கு, 'வரலாற்றுத் திரிபுகள்', 'மத அடையாள அரசியல்', முஸ்லிம் எதிர்ப்புக் கதைகள்' சொல்லிக் கொடுக்கப்பட்டன.


'சம்ஸ்கிருதி ஞான் பரீட்சா' போன்ற பாடப்பிரிவுகள் வழியாக, பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமர் பிறந்தார், அந்த இடத்தைக் காப்பாற்ற இந்துக்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்பட்டார்கள், 77 முறை படையெடுப்புகள் நடந்தன என்ற ஆதாரமற்ற கட்டுக்கதைகள், மாணவர்களின் மனத்தில் விதைக்கப்பட்ட வரலாறு இருக்கிறது. இதுதான் நம்முடைய கவலை.

இன்று, தமிழ்நாட்டில் இவர்களுக்கு ராமர் மட்டும் தேவையில்லை. முருகர் இருக்கிறார். திருப்பரங்குன்றம் விவகாரம் இருக்கிறது. தமிழ்நாட்டின் அமைதிச் சூழலைச் சீர்குலைக்க, மத அரசியல் பல வழிகளில் நுழைய முயற்சி செய்கிறது.

கடந்த ஆட்சியில் அனுமதி கிடைக்கவில்லை. காரணம், இந்தச் சிந்தனைக்கு 'திராவிட மாடல் அரசு' நேரடி எதிரியாக இருந்தது. அவர்கள் கொள்கையை உள்வாங்கியவர்களாக இருந்தார்கள். இப்போது, விஜய் அரசு அவ்வாறு இல்லை.

இது, தனியார் கல்வி மையம் பற்றிய கேள்வி மட்டும் அல்ல. இது, தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற கல்விச் சூழலைப் பாதுகாக்கவேண்டிய கேள்வி.



@ImPrinze

திரு.ஸ்ரீதர் வேம்பு சொல்வது போல், தி.மு.க. ஆட்சியில் அப்ரூவல் பெற காத்திருந்தார் என்பது உண்மைக்கு மாறான தகவலாக உள்ளது.

1. இவரின் Kalaivani Kalvi Maiyam என்பது, ஒன்றிய அரசின் கல்வித் துறையின் கீழ் இயங்கும் National Institute of Open Schooling வகையைச் சார்ந்தது. இதன் ஒப்புதல் அனைத்தும் ஒன்றிய அரசைச் சார்ந்து இருக்கும்போது, எதற்காக தி.மு.க. அரசின் முடிவுக்குக் காத்திருந்தார் என்று விளக்க வேண்டும்.

2. இவருடைய கல்வி நிறுவனம், கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட பின், இந்த த.வெ.க. அரசு வந்து என்ன அப்ரூவல் கொடுத்தார்கள் என்ற விளக்கமும் இல்லை.

3. இவர் சொல்வதுபோல் தி.மு.க. அரசு அப்ரூவல் கொடுக்காத பள்ளிக்கு, கடந்த ஆண்டு 2025 செப்டம்பர் மாதம், ஒன்றியக் கல்வி அமைச்சர் சென்று பார்வையிட்ட நிகழ்வும் நடந்துள்ளது என்பது முரணாக இருக்கிறது.

4. இவர் போன்ற பா.ஜ.க. ஆதரவாளர்கள் எல்லாம் தி.மு.க. அரசில் ஊழல் இருந்ததாகவும், அதை த.வெ.க. அரசு முற்றிலும் ஒழித்துவிட்டது என்ற பிம்பத் தோற்றத்தை உருவாக்கவே, இதுபோன்ற கட்டுக்கதைகளை அவிழ்த்துவருகிறார்கள்.

5. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா வரை அறிமுகமான நபரின் பள்ளிக்கு, தி.மு.க. அரசில் லஞ்சம் கேட்டு இருந்தால், அவர்களால் இதை வைத்தே அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சரைக் கைதுசெய்து உள்ளே வைத்திருப்பார்கள்.

6. மாற்றம் என்ற பெயரில், நம்மேல் திணிக்கப்பட்ட இந்த த.வெ.க. அரசு, 'தமிழ்நாட்டின் சர்வரோக நிவாரணி' என்று மக்களை நம்பவைக்க முயற்சி செய்கிறார்கள்.

## மலரும் நினைவுகள்

கருவூலம்

### கோமாளிக் கூத்தென்பர்!

1938-ஆம் ஆண்டு பிப்ரவரி 13 'குடிஅரசு' இதழில், ராஜாஜி அவர்களின் ஆட்சியின் இலட்சணம் குறித்து எழுதினார், பேரறிஞர் அண்ணா. "அதிகாரம் ஒரு போதை. பருகப்பருக இனிக்கும். பழகப்பழக அதிலே சொக்கி விழாதவர்கள் வெகு சிலரே! அதிலும் அரசியல் அதிகாரம் அதிகமான போதை தரும். அதிலும் மாயாஜாலங்களால் பெற்று, சூழ்ச்சியால் காப்பாற்றப்படும் அதிகாரம் மிக மிக அதிகமான போதையைத் தரும். அதைப் பருகுவோர் பரமானந்தம் அடைந்து, பாதம் பூமியில் சரியாகப் படாதபடி தாண்டவமாடுவர். அதைத்தான் அறிஞர்கள், 'அரசியல் கோமாளிக் கூத்தென்பர்' என விமர்சித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900